Dinamani 28/10/2021

# பி.இ. வகுப்புகள்: ஏஜசிடிஇ அறிவுறுத்தல்

**சென்னை, அக். 27:** நாடு முழுவதும் பொறியியல் கல்லூரிகளில் முதலாமாண்டு வகுப்புகள் தொடங்குவது குறித்து ஏஜசிடிஇ சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இது குறித்து அகில இந்திய தொழில்நுட்பக்கல்வி குழுமம் (ஏஜசிடிஇ) வெளியிட்ட அறிவிப்பு:

பொறியியல் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர்களுக்கான அறிமுக வகுப்புகள் நவ.15-ஆம் தேதிக்குள்ளும், பாட வகுப்புகள் நவ.30-ம் தேதிக்குள் தொடங்கப்பட வேண்டும். அதேபோல், கல்லூரிகளில் சேர்க்கை ஆணை பெற்ற மாணவர்கள் நவ.25-க்குள் விலகிவிட்டால் முழு கட்டணத்தையும் நிர்வாகம் வழங்க வேண்டும்.

இதுதவிர பொறியியல் கல்லூரிகள் நேரடி 2-ஆம் ஆண்டு சேர்க்கையை அக்.30-ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும். கல்லூரிகள் சூழலுக்கேற்ப வகுப்புகளை நேரடி முறை அல்லது இணையவழியில் நடத்திக் கொள்ளலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

Dinamalar 28/10/2021

# இன்ஜினியரிங் வகுப்பு ஏ.ஐ.சி.டி.இ., உத்தரவு

**சென்னை, அக். 28–**

இன்ஜினியரிங் மாணவர்களுக்கு நவ., 15 முதல் வகுப்புகளை துவங்க, கல்லூரிகளுக்கு ஏ.ஐ.சி.டி.இ., உத்தரவிட்டுள்ளது.

அகில இந்திய தொழில் நுட்ப கல்வி கவுன்சிலான ஏ.ஐ.சி.டி.இ., சார்பில், நடப்பு கல்வி ஆண்டுக்கான புதிய கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, 'இன்ஜினியரிங் உள்ளிட்ட தொழில் நுட்ப கல்லூரிகள் மற்றும் பல்கலைகள், முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு, நவ.,15 முதல் ஒருங்கிணைப்பு வகுப்புகளை துவங்க வேண்டும்.

'நவ., 30க்குள் அனைத்து இன்ஜினியரிங் கல்லூரிகளும், முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பாட வகுப்புகளை துவங்கி விட வேண்டும்' என, கூறப்பட்டுள்ளது.